21.03.2024

O.S.No.221/2016

வா.சா.2 .திரு.செல்வம் த.பெ.பம்பையன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**1**ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் பிரான்சிஸ் பாஸ்டினுக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவாசொத்து பிரான்சிஸ் பாஸ்டினுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். தாவா சொத்தினை பிரான்சிஸ் பாஸ்டின் ஜேசுராஜ் என்ற அன்பரசன் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார், எந்ததேதிரயில் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது என்றால் 24.06.2010 அன்று கிரையம் வாங்கியதாக பிரான்சிஸ் பாஸ்டின் என்னிடம் கூறினார், எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. பிரான்சிஸ் பாஸ்டின் தாவாசொத்தினை கிரையம் வாங்கியது எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தினை அளந்து கல் ஊன்றுவதற்கு யார் அழைத்ததன் பெயரில் நாங்கள் போனோம் என்றால், பிரான்சிஸ் பாஸ்டின் அழைத்ததன் பேரில் நாங்கள் சென்றோம். தாவா சொத்திற்கு பிரான்சிஸ் பாஸ்டினுக்கு பதிலாக அவர் கேட்டதன் பேரில் நான் முன்னிற்று வரி செலுத்தி மின் கட்டணம் செலுத்தி வந்தததாக சொல்லி உள்ளதால் தாவா சொத்திற்கான சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.385/4 ஆகும், மின் இணைப்பு எண் SC No.636 மற்றும் 1436 ஆகும். பிரான்சிஸ் பாஸ்டினை எனக்கு சுமார் 35 ஆண்டுகளாக தெரியும். நான் பிரான்சிஸ் பாஸ்டின் நண்பர் என்ற முறையில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**2** மற்றும் **4** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் பிரான்சிஸ் பாஸ்டினிடம் வேலை செய்து வருகிறேன். நான் ஆட்டோ சொந்தமாக வைத்து தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான், அந்த தொழிலும் செய்து கொண்டு, பிரான்சிஸ் பாஸ்டின் சாருக்கும் உதவியாக இருக்கிறேன். பிரான்சிஸ் பாஸ்டின் தாவா சொத்து அமைந்துள்ள உப்போடைபட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறாரா என்றால் இல்லை, அவர் கிரையம் வாங்கிய நிலத்தில் நான் பாதுகாத்து வருகிறேன். நான் பிரான்சிஸ் பாஸ்டின் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் இடத்தில் குடியிருந்து வருகிறேனா என்றால் இல்லை, அதற்கு அருகில் உள்ள ஏ.வலையப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்திற்கும் எனது ஊருக்கும் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். தாவா சொத்தில் 2 வீடுகள் உள்ளன. தாவா சொத்தில் உள்ள வீடுகளின் கதவு எண்.8/220, 8/118 ஆகும். கதவு எண்.8/118க்கு பிரான்சிஸ் பாஸ்டின் ஒருபோதும் வரி செலுத்தியது கிடையாது என்றால் சரிதான். கதவு எண்.8/118க்கு ராஜசேகரன் பெயரில் வரி செலுத்தப்பட்டு வருகிறது என்றால் எனக்கு தெரியாது, ஒரு முறை அவர் தகராறு செய்ததோடு சரி, அதற்கப்புறம் அவரை நான் பார்த்தில்லை. தாவா சொத்தின் மொத்த விஸ்திரணம் 6-1/4 ஏக்கர் நிலம் ஆகும். மேற்படி 6-1/4 ஏக்கருக்கும் பிரான்சிஸ் பாஸ்டின் பெயரில் நான் வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். 2010ம் ஆண்டு முதல் மேற்கூறியவாறு வரி செலுத்தி வருகீறேன். சென்ற ஆண்டுக்கு வரி செலுத்தியுள்ளேனா என்றால் வரி செலுத்தி உள்ளேன். கதவு எண்.8/118க்கு உண்டான வீடு அமைந்துள்ள வீடு எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதற்கு

அருகில் மாங்கன்றுகள் உள்ளன என்றால் சரிதான். கதவு எண்.8/118 அமைந்துள்ள வீடு மற்றும் அதனோடு சேர்ந்த 1 ஏக்கர நிலம் ஆகியவை தனியாக உள்ளது என்றால் அந்த இடமும் பிரான்சிஸ் பாஸ்டின் அவர்களது இடத்தோடு சேர்ந்துதான் உள்ளது. தாவா இடத்திற்கு மின் கட்டணம் செலுத்தியதாக சொல்வதால் யார் பெயரில் நான் மின் கட்டணம் செலுத்தி வந்தேன் என்றால் பிரான்சிஸ் பாஸ்டின் பெயரில் செலுத்தி வந்தேன். அந்த ரசிதுகள் எல்லாம் நான் பிரான்சிஸ் பாஸ்டின் என்பவரிடம் கொடுத்து விட்டேன். கதவு எண்.8/118 ல் உள்ள வீட்டின் மின் இணைப்பு ராஜகேசரன் பெயரில் உள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. தாவா சொத்தினை சுற்றி சுமார் 300 கற்கள் ஊன்றப்பட்டுள்ளன. மொத்த சொத்தான 6-1/4 ஏக்கருக்கும் 300 கற்கள் தான் ஊன்றப்பட்டதா என்றால் ஆமாம். தாவா இடத்தில் கற்கள் ஊன்றியது நான் கிடையாது என்றாலும், பிரான்சிஸ் பாஸ்டின் கேட்டதற்ககிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. கதவு எண்.8/118 எண் கொண்ட வீட்டோடு அமைந்துள்ள 1 எக்கர் நிலத்தை சுற்றிதான் கற்கள் ஊன்றி வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றாலும், நான் கூறுவது போல் மொத்த சொத்தான 6-1/4 ஏக்கருக்கு கல்கால் ஊன்றப்படவில்லை என்றால் சரியல்ல. பிரான்சிஸ் பாஸ்டின் என்ன தொழில் செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. அவர் 1986 முதல் எனக்கு பழக்கம் என்றால் சரிதான். அவர் திருச்சியில் குடியிருக்கிறார். என்ன வேலைக்காக என்னை அவர் அழைப்பார் என்றால் அவர் இடம் வாங்கி போட்டுள்ளதை அவ்வப்போது சென்று பார்த்து வருவதற்காக என்னை அழைப்பார். தாவா சொத்து பகுதி காலி இடமாகவும், பகுதி மாமரங்களும் உள்ளன. ஆட்டோ ஓட்டுவதுதான் எனது தொழில் என்றாலும் தாவா சொத்து இருக்கும் இடத்திற்கு நான் ஒருபோதும் சென்றதில்லை என்றாலும் சரியல்ல. பிரான்சிஸ் பாஸ்டின் கேட்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**3**ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

பிரான்சிஸ் பாஸ்டின் மதுரை வரும்போது எனக்கு பழக்கம். தாவா வழக்கு பற்றி எனக்கு நன்கு தெரியும் என்று கூறியுள்ளதால், தாவா வழக்கில் எத்தனை பிரதிவாதிகள் உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தினை பிரான்சிஸ் பாஸ்டின் என்பவர் ஜேசுராஜ் என்ற அன்பரசனிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதாக நான் சொல்லி உள்ளதால் மேற்படி ஜேசுராஜ் என்ற அன்பரசன் எங்குள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்தோணி சாமி வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் நான்குமால் என்ன என்றால் தெற்கு பக்கம் பி.கே.மூக்கன் அம்பலம் இடமும், வடக்கே. கே.எஸ்.கிருஷ்ணன் அம்பலம் இடம், மேற்கே ரோடும், கிழக்கே வீட்டு மனை பிரிவுகளும் உள்ளன. நான் எனது கிராமமான வலையட்டியில் ஆட்டோ ஓட்டி வருகிறேன். வழக்கு பற்றி எனக்குஎதுவும் தெரியாது என்றாலும், பிரான்சிஸ் பாஸ்டின் என்பவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.